**மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.**

தமிழ்நாட்டின் ஆளுநராகப் பொறுப்பேற்று, முதன்முறையாக இப்பேரவையில் உரையாற்றுவதை எண்ணி நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களையும் பொங்கல் வாழ்த்துக்களையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். திடமான முடிவுகளைத் துணிச்சலுடன் மேற்கொள்ளவல்ல மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் திறமைமிக்க தலைமையின் கீழ், மாநிலத்தின் நலனையும், வளர்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டு எண்ணற்ற நலத்திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் துவக்கி, செயல்படும் இந்த அரசின் மூலம் மகத்தான செயலாக்கத்தை நமது மாநிலம் கண்டுள்ளது. கடுமையான நிதி நெருக்கடி இருப்பினும் இக்குறுகிய காலத்தில் பெரும்பாலான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள உறுதியும், அர்ப்பணிப்பும் பாராட்டுதலுக்குரியது. இத்திட்டங்கள் பொது மக்களைச்

சென்றடைந்து அவர்தம் வாழ்வில் நல்ல பலன்களை ஏற்படுத்தி வருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

2. அண்மையில் நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில், தமது ஆழ்ந்த அரசியல் அறிவை வெளிப்படுத்தி, மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின் மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை மீண்டும் ஒருமுறை நிலைநாட்டியதற்காக தமிழக மக்களைப் பாராட்டுகின்றேன். வாக்காளர்களின் இந்த அரசியல் முதிர்ச்சியும், நேர்மையான மற்றும் அமைதியான முறையில் தேர்தலை நடத்த இந்த அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகளும் அடித்தளத்தில் உள்ள மக்களாட்சி அமைப்புகளை மேலும் வலுப்படுத்த உதவும். உள்ளாட்சி அமைப்புகளின் துடிப்பான செயல்பாடுகள் அந்த அமைப்புகளுக்கு மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களையும், இளம் பெண்களையும் திறமையும் அர்ப்பணிப்பு உணர்வும் கொண்ட எதிர்காலத் தலைவர்களாக உருவாக வழிவகுக்கும். **உள்ளாட்சி அமைப்புகளை மேலும் வலுப்படுத்த நான்காவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், அது குறித்த**

**செயல் அறிக்கை சட்டப்பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் வைக்கப்படும்.**

**3.** சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான அனைத்து குறியீடுகளிலும், இந்தியாவிலேயே **முதன்மை மாநிலமாக** தமிழ்நாட்டை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த அரசு எடுத்து வருகிறது. வளர்ச்சிப் பணிகளுக்குப் புத்துயிரூட்டி, அதிகப் பொருளாதார வளர்ச்சியை அடையத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கும் உத்தியோடு, ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களும் பொருளாதார மேம்பாட்டில் சம வாய்ப்பு பெறும் வகையில் நலத்திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் வழங்கப்படும் உதவிகள் கணிசமான அளவு உயர்த்தப்பட்டுள்ளதையும், ஏழை எளியவர்களின் உணவு மற்றும் சமூகப் பாதுகாப்புகளை உறுதி செய்யும் வகையில் நாட்டிலேயே முதன்முறையாக விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருவதையும் நீங்கள் அறிவீர்கள். இது தவிர, இந்த அரசின் எண்ணற்ற முன்னோடித் திட்டங்களான ஏழைக் குடும்பங்களுக்குக் கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வழங்குதல்; பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெறத் தகுதியுடைய குடும்பங்களுக்கு மிக்சி, கிரைண்டர்,

மின்விசிறிகள் வழங்குதல்; மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் போன்றவையும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு பதவியேற்றபோது இருந்த மோசமான நிதி நிலைமையிலும், முன் எப்போதும் இல்லாத அளவாக **8,000** கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் நிதி பல்வேறு புதிய நலத் திட்டங்களுக்காக இந்த அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**4.** அனைவரும் பயன்பெறத்தக்க நிலையான வளர்ச்சியால் ஏற்படும் பயனுக்கு அரசு உதவிகளும், மானியங்களும் ஈடாக அமையாது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். பெரும்பான்மையான ஏழை மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக உள்ள முதன்மைத் துறையில் தற்போதுள்ள தேக்க நிலையை நீக்கி அதன் வளர்ச்சியை ஊக்குவிக்க இந்த அரசு மிகத் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இதுமட்டுமல்லாமல், உயர் வளர்ச்சியை எய்துவதில் உள்ள தடைகளைக் களையும் வகையில் நகர்ப்புரக் கட்டமைப்புகளை மேம்படுத்தும் பொருட்டும், பொருளாதாரக் கட்டமைப்புகளை வலுப்படுத்தும் பொருட்டும் தீவிர அணுகுமுறையை கடைப்பிடிப்பது வருங்கால உத்திகளில் தொடர்ந்து முக்கியத்துவம் பெறும். பல்வேறு திட்டங்கள்

தொடங்கப்பட்டு, இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், இத்திட்டங்களால் விளையும் பயனும், மேம்பட்ட சேவைகளும் மக்களை முழுமையாகச் சென்றடையும் வகையில் திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு ஒளிவு மறைவற்ற, திறமையான நிர்வாகத்தை வழங்கி நாட்டிற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் இவ்வரசின் செயல்பாடுகள் அமையும்.

**5.** அண்டை மாநிலங்களுடன் இணக்கமான உறவைப் பேணுவதில் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. எனினும், துரதிர்ஷ்டவசமாக நீர் ஆதாரத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு கடைமடை மாநிலமாக உள்ளதால், தவறான குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட பரப்புரைகளாலும் மத்திய அரசு தொடர்ந்து காட்டும் அலட்சியப் போக்காலும், அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறு அணை தொடர்பாக அண்மையில் ஏற்பட்ட நிகழ்வுகளை நமது மாநிலம் மிகுந்த கட்டுப்பாட்டுடனும், திறமையுடனும் கையாண்டுள்ளது. அணையின் பாதுகாப்பு குறித்து பொது மக்களிடையே பீதியைக் கிளப்பும் நோக்குடன் கேரள மாநிலத்தால் பரப்பப்பட்ட தவறான பிரச்சாரங்களே

இந்த நிகழ்வுகளுக்கு மூலகாரணமாக அமைந்துள்ளன. அணையின் பாதுகாப்புத் தன்மையை உறுதி செய்வதே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். எனவே, இதுபோன்ற உள்நோக்கங்கொண்ட பிரச்சாரங்களுக்கு இரையாக வேண்டாம் என்று கேரள மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன். நமது மாநிலத்தின் உரிமைக்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் எவ்விதத்திலும் குந்தகம் ஏற்படாத வகையில் நீதிமன்றங்கள் உள்பட அனைத்து மன்றங்களிலும் நமது உரிமையை இந்த அரசு நிலைநாட்டும் என்று திட்டவட்டமாக கூறிக்கொள்கிறேன். இது குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு நடக்குமாறு கேரள அரசை வலியுறுத்தும்படி மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம். பல்வேறு மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பிரச்சினைகள் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத நிலையில், இது குறித்த அமைப்பு முறைகளை மறுபரிசீலனை செய்வதற்கான அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. அணையின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அணை அமைந்திருக்கும் மாநிலத்தில் உள்ள அணைப் பாதுகாப்புக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் அணை இருப்பதை விட, அணையின் மீது உரிமையுள்ள மாநிலத்தில் உள்ள அணைப் பாதுகாப்புக் குழுவின் கட்டுப்பாட்டில் அணை இருக்க வேண்டும் என்பது 2010 ஆம் ஆண்டு

அணைப் பாதுகாப்பு சட்ட முன்வடிவில் உறுதி செய்யப்பட வேண்டும் என்று இந்த முக்கியமான தருணத்தில் மத்திய அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

6. சென்னை, சேப்பாக்கம் அரசு அலுவலக வளாகத்தில் 2012 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் நாள் இரவு ஏற்பட்ட தீ விபத்தின் விளைவாக தீயணைப்பு வீரர் ஒருவர் உயிரிழந்ததோடு மட்டுமல்லாமல் தீரமுடன் போராடிய அலுவலர்கள் சிலருக்கும் கடும் காயம் ஏற்பட்டது. உயிரிழந்த தீயணைப்பு வீரரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என விரும்புகிறேன். இத்துயர சம்பவத்தில் தீரமுடன் போராடிய இவ்வலுவலர்களுக்கு, 2012 ஆம் ஆண்டின் வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்களை இவ்வரசு வழங்கியுள்ளதை நான் பாராட்டுகிறேன். வருங்காலங்களில் இதுபோன்ற பேரிடர் நிகழாது தவிர்க்கும் வகையிலும், இத்தகைய இடங்களில் பணிபுரிபவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், அரசு அலுவலகங்கள் செயல்படும் அனைத்து தொன்மையான கட்டடங்களின் கட்டமைப்பு உறுதித் தன்மையை மதிப்பீடு செய்ய ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**7.** இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் சமூக விரோத சக்திகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளில் பாரபட்சமின்றி உறுதியாக இந்த அரசு நடவடிக்கை எடுத்ததன் விளைவாக, ஐந்து ஆண்டு இடைவெளிக்குப் பிறகு தமிழகத்தில் மீண்டும் அமைதி திரும்பியுள்ளது. உள்ளாட்சித் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றதை சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும், ஊடகங்களும் பாராட்டியுள்ளன. அமைதிக்குக் குந்தகம் ஏற்பட வாய்ப்புள்ளதென கருதப்பட்ட பல்வேறு விழாக்களும் அமைதியான முறையில் நடந்து முடிந்துள்ளன. பலவந்தமாக அபகரிக்கப்பட்ட அப்பாவி மக்களின் நிலங்கள் இந்த அரசால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்ட நில அபகரிப்புத் தடுப்புப் பிரிவுகளால் மீட்டளிக்கப்பட்டு அதன் மூலம் அம்மக்கள் பயன் அடைந்துள்ளனர். ஏழை எளிய மக்களை அச்சுறுத்தி சுரண்டும் இத்தகைய நில அபகரிப்பாளர்களை சட்டத்தின்முன் கொண்டுவந்து உரிய நீதியை வழங்க இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன்.

**8.** உலகப் பொருளாதாரத்தில் தொடர்ந்து காணப்படும் மந்தநிலை, அரசின் நிதி உறுதித் தன்மையையும்

(fiscal stability), அதிக செலவுகளை அரசு மேற்கொள்ளும் திறனையும் பாதிக்கும் வகையில் உள்ளது. மந்தமான வளர்ச்சி, தொடர்ந்து காணப்படும் அதிக பணவீக்க அளவு, சரிந்துவரும் ரூபாயின் மதிப்பு, உயர்ந்து வரும் வட்டி விகிதம் ஆகியவை நாம் உயர் வளர்ச்சி இலக்கை எட்டுவதற்கு தடைக்கற்களாக உள்ளன. இதன் விளைவாக, முதலீடுகள் குறைந்து வருவதுடன் தேசிய அளவில் 2011–2012 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி மதிப்பீடு கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பொருளாதார மந்தநிலையின் எதிர்மறை விளைவுகளால் மாநிலப் பொருளாதாரம் பாதிக்கப்படுவது தவிர்க்க இயலாதது ஆகும். இந்த எதிர்மறை சூழ்நிலைகளுக்கிடையிலும், உள்கட்டமைப்புக்கும் சமூகப் பாதுகாப்புக்கும் எவ்வித குறைவுமின்றி போதிய நிதியை ஒதுக்கீடு செய்வதில் இந்த அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. **வரும் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்த அரசு 1,85,000 கோடி ரூபாயைத் திட்டப் பணிகளுக்குச் செலவிட திட்டமிட்டுள்ளது. இது பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவிடப்பட்ட 85,000 கோடி ரூபாயை விட இரண்டு மடங்குக்கும் அதிகமானதாகும். இந்த உயர் இலக்கு**

**தமிழ்நாட்டை மீண்டும் துரித வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும்.**

**9.** மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில் மத்திய அரசு சட்டங்களை இயற்ற தொடர்ந்து முயற்சி செய்து வருவதும், திட்டங்களை வடிவமைப்பதில் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான அணுகுமுறையைத் திணிப்பதும் மத்திய–மாநில உறவுகளில் ஆரோக்கியமான சூழ்நிலை ஏற்பட வழிவகுக்காது. திட்டமிட்ட குறிக்கோளை எட்டி, சிறந்த பலன்களைப் பெறுவதற்கு ஏதுவாக, தேசிய திட்டங்களை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும் இணக்கமான செயல்முறையைப் பின்பற்றி, பரந்த குறிக்கோள்களை மட்டும் மத்திய அரசு நிர்ணயிக்க வேண்டும் என்றும், அத்தகைய திட்டங்களில் மத்திய நிதியுடன் மாநிலத்தின் நிதியையும் ஒருங்கிணைத்து, மாநிலங்களின் தேவைகளுக்கேற்ப, அந்தந்த மாநில அரசுகளுக்கே திட்டங்களை வடிவமைக்கும் சுதந்திரத்தை அளிக்கவேண்டும் என்றும் இந்த அரசு வலியுறுத்துகிறது. சரக்கு மற்றும் சேவை வரிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நம் மாநிலத்தால் சுட்டிக்காட்டப்பட்ட பிரச்சனைகளுக்கு மத்திய அரசு முழுமையான தீர்வு காண வேண்டும் என்று இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

**10.** தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் தொன்மையான பண்பாட்டைப் பாதுகாக்கவும் இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்க இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும். மூத்த தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1,000/– ரூபாயிலிருந்து 2,000/– ரூபாய் என இருமடங்காக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். முந்தைய ஆளுநர் உரையில் தெரிவித்தவாறே திருக்குறள், தெரிந்தெடுக்கப்பட்ட பாரதியார் மற்றும் பாரதிதாசன் படைப்புகளை சீன மற்றும் அரேபிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிறந்த தமிழ் அறிஞர்களின் படைப்புகளைப் பாதுகாத்து, அவற்றை அனைவரிடத்தும் கொண்டு செல்லும் வகையில் நாட்டுடைமையாக்கப்பட்ட 1,472 புத்தகங்கள் தமிழ் இணைய பல்கலைக்கழக இணையதளத்தில் இந்த அரசால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**11.** சென்ற ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 'தொலைநோக்குத் திட்டம் 2025' தயாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதை மாண்புமிகு

உறுப்பினர்கள் அறிவீர்கள். தமிழ்நாட்டிற்கான இந்த அரசின் வருங்காலத் திட்டங்களையும் அவற்றைச் செயலாக்கும் வழிமுறைகளையும் விரித்துரைக்கும் இத்திட்ட அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் வெளியிட இருக்கிறார்கள் என்பதை நான் இங்கு பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். **முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்டறிதல், முன்னுரிமைப்படுத்துதல், ஒப்புதல் அளித்தல், விரைந்து நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை வழி நடத்தக் கூடிய தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தினை தோற்றுவிப்பதற்கான சட்ட முன்வடிவு வரும் வரவு–செலவுத் திட்ட கூட்டத் தொடரின்போது அறிமுகப்படுத்தப்படும். முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 'உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி' என்ற ஒன்று தனியாக இந்த அரசால் ஏற்படுத்தப்படும். இந்த வகையில், திட்டச் செயலாக்கத்தில் அரசு மற்றும் தனியார் நிதி ஆதாரங்களை ஒருங்கிணைக்க 'அரசு–தனியார் பங்களிப்புக் கொள்கை' (Public Private Partnership Policy) ஒன்றை இந்த அரசு விரைவில் வெளியிடும்.**

**12.** கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த தொடர்மழை மற்றும் 'தானே' புயல் ஆகியவற்றால்

பேரிழப்பைச் சந்தித்துள்ள மக்களின் துயரத்தைத் துடைக்க இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. துரதிருஷ்டவசமாக இந்த வடகிழக்குப் பருவமழை காரணமாக 177 உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை உடனடியாக சீரமைக்க நவம்பர் 2011-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 150 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. தானே புயலால் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பயிர்கள், குடிசைகள், படகுகள், இதர கட்டமைப்பு வசதிகள் மிகப்பெருமளவில் சேதமடைந்ததையடுத்து, நிவாரணப் பணிகளுக்காகவும், இழப்பீடுகளுக்காகவும், மின்சாரம், குடிநீர், சாலைகள் உட்பட பழுதடைந்த கட்டமைப்புகளை சீரமைக்கவும் 850 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி ஆணையிட்டார்கள். முன்னெச்சரிக்கை தகவல் அளிக்கும் முறைகளைச் சரியாகப் பயன்படுத்தி, உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டதையும், தாமதமின்றி உரிய நேரத்தில் நிவாரண உதவிகளை வழங்கியதையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். இத்தகைய பாதிப்புகளிலிருந்து மீண்டு இயல்பு நிலைக்குத் திரும்ப சாதாரணமாக பல மாதங்கள் ஆகுமென்றாலும்,

மாநில அரசின் திட்டமிட்ட தீவிரமான நிவாரணப் பணிகளின் காரணமாக ஒரு மாத காலத்திற்குள் பெருமளவு இயல்புநிலை திரும்பியுள்ளதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

13. நிலைப் பயிர்களான (perennial crops) முந்திரி, பலா, தென்னை முதலியன அழிந்து விவசாயிகளின் வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், இதற்கான நிரந்தர மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்பட்டதுடன், **ஒரு சிறப்பு நேர்வாக, நிலைப் பயிர்களை, குறிப்பாக முந்திரிப் பயிரை, வீரியம் மிக்க ஒட்டுச் செடிகளைக் கொண்டு, உயர் அடர் நடவு முறையில் மீண்டும் பயிரிட்டு, ஓராண்டுப் பராமரிப்புக்கான முழுச் செலவையும் அரசே ஏற்றுக்கொள்ளவும், வருடாந்திரப் பயிர் வகைகள் (annual crops) பாதிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் பயிர் செய்ய ஏதுவாக, விதையுடன் இடுபொருட்களும் அடங்கிய சிறு தளைகளை (mini kits), விலையின்றி வழங்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளுக்குப் பதிலாக, அக்குடும்பங்களுக்குப் பாதுகாப்பான வீடுகள் அளிக்கும் வகையில் 1,000 கோடி ரூபாய் செலவில்,**

**ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டும் ஒரு மகத்தான திட்டம் இந்த அரசால் தொடங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.** புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளின் விவரங்களை எடுத்துக்கூறி தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து (NDRF) 5,248 கோடி ரூபாய் சிறப்பு நிதியுதவி கோரும் விரிவான கோரிக்கை மத்திய அரசிடம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், இடைக்கால நிவாரணமாக 500 கோடி ரூபாயை அளித்துள்ள மத்திய அரசுக்கு இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்தியக் குழுவும் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டுச் சென்றுள்ளதைத் தொடர்ந்து, மாநில அரசு கோரியவாறு போதிய நிதியுதவியினை மத்திய அரசு விரைந்து அளிக்கும் என நான் நம்புகிறேன்.

14. வறுமையும் வேலையின்மையும் நமது சமுதாயம் எதிர்கொண்டுள்ள இரட்டைச் சவால்களாகும். பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பல ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வந்தாலும் வறுமையை ஒழிப்பதில் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை. கிராமப்புற வறுமை ஓரளவு குறைக்கப்பட்டிருப்பினும் நகர்ப்புர வறுமைக்கான தீர்வு தொடர்ந்து ஏமாற்றம் அளிப்பதாகவே உள்ளது. எனவே, தற்போதுள்ள வறுமை ஒழிப்பு அணுகுமுறைகளுக்கு

முற்றிலும் மாற்றாக ஒவ்வொரு குடும்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்தும் புதிய அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டியது அவசியம். கிராமப்புற வறுமை ஒழிப்பில் மாநிலத் திட்டங்களுடன் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், புது வாழ்வுத் திட்டம் போன்றவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் முயற்சிகள் தொடரும். **கடந்த காலங்களில் நகர்ப்புர வறுமை ஒழிப்பு குறித்து உரிய கவனம் செலுத்தப் பெறாத நிலையில் நகர்ப்புரங்களில் நிலவும் அதிக வறுமை நிலையைப் போக்குவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று வரும் வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும்.**

**15.** வறுமை, வேலையின்மையோடு தொடர்புடைய பிரச்சனையாகும். திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் மூலமாக இளைஞர்களை வேலைவாய்ப்பு பெறும் தகுதியுடையவர்களாக உருவாக்குவதையும், புதிய தொழில் முனைவோரை ஊக்குவித்து வேலைவாய்ப்பைப் பெருக்குவதையும், இருமுனை நடவடிக்கைகளாக இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. **திறன் மேம்பாட்டு இயக்கம் சிறப்புடன் செயல்பட பல்வேறு துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் திறன் வளர் பயிற்சிகளை ஒருங்கிணைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. திறன்**

**வளர் பயிற்சிகளையும் பயிற்சி மையங்களையும் தேர்ந்தெடுத்தல் மற்றும் பயிற்சிகளைக் கண்காணித்தல், பயிற்சி பெற்றவர் வேலைவாய்ப்பைப் பெறும் வரை கண்காணித்தல் போன்றவை ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வரப்படும். தமிழ்நாடு மாநிலத் திறன் மேம்பாட்டு இயக்கத்தின் வழிகாட்டுதலோடு, மாநிலத் திறன் மேம்பாட்டு இயக்கச் சங்கம் இதற்கான ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படும். இதனால் ஒரே மாதிரியான தரமான பயிற்சி முறையையும், கட்டணங்களையும் பல்வேறு துறைகளும் எளிதாகப் பயன்படுத்தி தரமான பயிற்சி வழங்க வழிவகை ஏற்படுவதுடன், ஒன்றுக்கும் மேற்பட்ட துறைகளில் ஒரே நபர் பயிற்சி பெறுவதும் நிதி ஆதாரங்கள் வீணாவதும் தடுக்கப்படும்.**

**16.** முதன்மைத் துறையில் வளர்ச்சி இருந்தால் மட்டுமே அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய வளர்ச்சி சாத்தியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் உற்பத்தியையும், விவசாயிகளின் வருவாயையும் பெருக்கும் வண்ணம், **இரண்டாவது பசுமைப் புரட்சியை** ஏற்படுத்த இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இதற்காக, வேளாண் துறையில் கட்டமைப்பை மேம்படுத்த தொடர் முதலீடு அவசியமாகிறது.

வேளாண் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்க, மாநிலத் திட்டங்களுடன் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல், சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசனத் திட்டம், சேமிப்புக் கிடங்கு வசதிகளை மேம்படுத்துதல், சந்தைக் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் வேளாண்துறை புத்துயிர் பெற்றுள்ளது. **மேட்டூர் அணையிலிருந்து முன்கூட்டியே பாசனத்திற்காக நீர் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதால், மாநிலத்தில் அபரிமிதமான குறுவை விளைச்சல் ஏற்பட்டது. இதனால், கடந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 75.95 லட்சம் டன் என்ற அளவை விஞ்சி இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி முதல் முறையாக 100 லட்சம் டன் அளவினையும் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.** விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் இந்த அரசின் சிறப்புத் திட்டங்கள் கிராமப்புற ஏழை மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. சுமார் 1.12 இலட்சம் குடும்பங்கள் 2011–2012 ஆம் ஆண்டில் இந்தத் திட்டங்களால் பயன்பெறும். இவற்றுடன், கால்நடை பராமரிப்புத் துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும் வகையில், விரிவாக்க வசதிகளையும், கட்டமைப்புகளையும் இந்த அரசு வலுப்படுத்தி வருகிறது.

**17.** மீன்வளத் துறையிலும், ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பல புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் அனைத்தும் முதன்மைத் துறைக்கு சிறந்த ஊக்கத்தை அளிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் இவ்வரசுக்கு ஆழ்ந்த கவலையளிப்பதாக உள்ளது. நமது ஆட்சேபங்களுக்குப் பிறகும் இந்நிகழ்வுகள் தொடர்கின்றன. இப்பிரச்சனைக்குத் தீர்வு காண இலங்கையிடம் கடுமையாக வலியுறுத்துமாறு இந்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். பாக் வளைகுடாப் பகுதியில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமையைப் பாதுகாக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று, இந்த அரசு கேட்டுக்கொள்கிறது. கச்சத் தீவைத் திரும்பப் பெறுவதன் மூலமே தமிழக மீனவர்கள் இழந்த உரிமையை மீளப் பெற இயலும் என்ற இந்த அரசின் உறுதியான முடிவினை இத்தருணத்தில் நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

**18.** நாட்டிலேயே தமிழகத்தில்தான் அனைவரும் பயன்பெறக்கூடிய பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில் அரிசி அட்டை தாரர்களுக்கு விலையில்லா அரிசியை வழங்குவதுடன், அனைத்து அட்டைதாரர்களுக்கும் பருப்பு, சமையல் எண்ணெய், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு போன்றவற்றை மானிய விலையில் இந்த அரசு வழங்கி வருகிறது. இந்த வகையில், மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள உணவுப் பாதுகாப்பு சட்டமுன்வடிவு, தற்போது அனைவரும் பெற்றுள்ள உணவுப் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படுத்துவதுடன், மத்திய தொகுப்பிலிருந்து தமிழக அரசு பெறும் உணவு தானிய ஒதுக்கீட்டையும் குறைக்க வழிசெய்கிறது. எனவே, மத்திய அரசு முன்மொழிந்துள்ள இந்த உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் தற்போதைய வடிவை இந்த அரசு எதிர்க்கிறது. பொது விநியோகத் திட்டம் முறையாகச் செயல்படாத மாநிலங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இச்சட்ட முன்வடிவு அனைவருக்கும் பயனளிக்கும் பொது விநியோகத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்தி வரும் தமிழகத்திற்கு எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே, சிறப்பாக பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் மாநிலங்களுக்கு உணவுப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து

விலக்களிக்கவோ, அம்மாநிலங்களுக்குப் பொருந்தும் வண்ணம் விதிகளில் உரிய மாற்றங்களை உள்ளடக்கி, இச்சட்ட முன்வடிவில் பெருமளவு திருத்தம் செய்யப்படவோ வேண்டுமென மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்கிறது.

**19.** தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க புதிய தொழில் கொள்கையையும், முக்கிய மற்றும் வளர்ந்து வரும் துறைகளுக்கான துறைவாரியான கொள்கைகளையும் இந்த அரசு உருவாக்கி வருகிறது. தொழில் வளர்ச்சிப் பெருவழிகளில் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலமாக தொழிலக குழுமங்களின் (Industrial clusters) வளர்ச்சியை துரிதப்படுத்தி சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைத் துறையிலும், மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை வகிப்பதைப்போலவே, வன்பொருள் உற்பத்தியிலும் இந்தியாவின் முன்னணி மையமாக தமிழகத்தை உருவாக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. இதன் பொருட்டு, **வன்பொருள் உற்பத்தியில் அதிக முதலீடுகளை ஈர்ப்பது குறித்த சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை அளிக்க தொழில்துறை பிரதிநிதிகளை**

**உள்ளடக்கிய வல்லுநர் குழு ஒன்று இந்த அரசால் அமைக்கப்படும்.**

**20.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தபடி, நொய்யல் ஆற்றில் கழிவு நீர் கலப்பதைத் தடுக்கும் பொருட்டு, பொதுக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் செயல்படச் செய்ய அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது. அருள்புரம் பொதுக் கழிவு சுத்திகரிப்பு ஆலையில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வரும் கழிவு நீரே வெளியேறாத நிலையை (Zero Liquid Discharge) எய்தக் கூடிய நானோ வடிகட்டல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில், **மூடிக் கிடக்கும் பொது சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் செயல்பட வைக்க வட்டியில்லாக் கடனாக 179 கோடி ரூபாயை இந்த அரசு ஏற்கெனவே வழங்கியுள்ளது. இது தவிர, நீதிமன்றத்தால் இழப்பீட்டுத் தொகை உறுதி செய்யப்படுவதை எதிர்நோக்கி, நொய்யல் பாசனப் பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு 75 கோடி ரூபாய் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.** மாண்புமிகு முதலமைச்சரின் இந்த நடவடிக்கை, சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்கள் மற்றும் விவசாயிகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளதுடன்,

இந்த சிக்கலான பிரச்சனைக்கு ஒரு நல்ல முடிவு ஏற்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வில் ஒரு புதிய நம்பிக்கை பிறக்கவும் வழிவகுத்துள்ளது.

**21.** இந்த அரசின் பல்வேறு தீவிர முயற்சிகளுக்குப் பின்னரும், மாநிலத்தின் மின் நிலைமை தொடர்ந்து கவலையளிப்பதாக உள்ளது. முந்தைய அரசு புதிய உற்பத்தியினை ஏற்படுத்தத் தவறியதாலும், மத்திய தொகுப்பிலிருந்து கூடுதல் மின்சார ஒதுக்கீடு செய்வது பற்றிய நமது கோரிக்கைகளுக்கு மத்திய அரசு செவிசாய்க்காத காரணத்தாலும் தமிழக மக்கள் மின் பற்றாக்குறையினால் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். கடன் சுமையால் மூழ்கும் நிலையிலுள்ள மின்வாரியத்திற்குப் புத்துயிரூட்ட **2,600** கோடி ரூபாயை பங்கு மூலதனமாகவும், **955** கோடி ரூபாயை கடனாகவும் இவ்வரசு வழங்கியுள்ளது. மின் உற்பத்தியை அதிகப்படுத்தவும், பற்றாக்குறையைக் குறைக்கவும் இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து, காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்ய நிறுவப்பட்ட **556** மெகாவாட் தவிர, மாநிலத் தொகுப்பில் **30** மெகாவாட்டும் மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப்படும் பங்காக **113** மெகாவாட்டும்

கூடுதல் மின் உற்பத்தித் திறனாக சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், அடுத்த இரண்டாண்டுகளில் 4,704 மெகாவாட் அளவிற்குக் கூடுதல் மின்சாரம் கிடைக்கும் வகையில் புதிய திட்டங்கள் செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**22.** சீரான பொருளாதார வளர்ச்சிக்கு தரமான சாலைக் கட்டமைப்பு இன்றியமையாததாகும். போக்குவரத்துத் திறன் மேம்பாட்டிற்காக, முக்கியச் சாலை வழிகளைத் தரம் உயர்த்துதல், புறவழிச் சாலைகளை உருவாக்குதல், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட பிற சாலைகள் போன்றவற்றை அகலப்படுத்தி வலுப்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. **புதிதாக அமைக்கப்படும் சாலைத் திட்டங்களில் (Green Field Road Projects) நில உரிமையாளர்கள் மேம்பட்ட பயனைப் பெற நிலத்திரட்டு முறை (Land Pooling System) கடைபிடிக்கப்படும். 2011–2012 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டபடி, செயல்பாட்டின் அடிப்படையிலான சாலைப் பராமரிப்பு ஒப்பந்த முறை, சோதனை அடிப்படையில் கோயம்புத்தூர் வட்டத்தில் விரைவில் தொடங்கப்பட்டு படிப்படியாக மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட உள்ளது.**

**23.** கல்வி பெறும் உரிமைச் சட்டத்தை செயல்படுத்துவது குறித்த விதிகளை வகுத்து அறிவிக்கை செய்துள்ள இந்த அரசு, அவற்றை செயல்படுத்தவும் உறுதி பூண்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள் போன்ற கூடுதல் கட்டமைப்பு வசதிகள் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர் பணியிடப் பற்றாக்குறையைப் போக்கிட **33,681** ஆசிரியர் பணியிடங்களும், **16,549** பகுதிநேர ஆசிரியர் பணியிடங்களும், **5,000** ஆசிரியரல்லாத பணியிடங்களும் நடப்பாண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன. கற்றல் முறையை எளிதாக்கவும், மாணவர்களின் சுமையைக் குறைக்கவும், **2012–2013** ஆம் கல்வியாண்டு முதல் முப்பருவ முறையை எட்டாம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கல்வித் தரத்தை உயர்த்த அரசு எடுத்து வரும் இம்முயற்சிகள், அனைவருக்கும் இடைநிலைக் கல்வியை உறுதி செய்வதுடன் பள்ளிப்படிப்பை நிறைவு செய்து வெளியேறும் மாணவ–மாணவியரின் கல்வித் தரத்தையும், திறனையும் உயர்த்த வழிசெய்யும் என நம்புகிறேன்.

**24.** அனைவருக்கும் உலகத் தரம் வாய்ந்த உயர்கல்வி கிடைக்க இந்த அரசு எண்ணற்ற முயற்சிகளை

எடுத்து வருகிறது. குறுகிய காலத்தில், 11 கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. 34 அரசுக் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் (courses) தொடங்கப்பட்டுள்ளன. நிர்வாக நடைமுறைக்கு சாத்தியமற்ற வகையில் முந்தைய அரசால் பல்வேறு இடங்களில் தொடங்கப்பட்ட அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, நாட்டிலேயே மிகப் பெரிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்துவதற்காக, விலையில்லா மடிக்கணினி வழங்கும் மாபெரும் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். பெரிதும் பாராட்டப்படும் இச்சிறப்பான திட்டம் நம் மாநில மனித வளத்தின் தரத்தை மேலும் மேம்படுத்தும் என நம்புகிறேன். மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்விகளுக்கு, மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள பொது நுழைவுத் தேர்வுமுறை நமது மாணவர்களின் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனால் அதை நாம் தொடர்ந்து எதிர்ப்போம்.

25. **புதிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 1.34 கோடிக்கும் மேலான குடும்பங்கள் பயன்பெறும் வகையில், இவ்வாண்டு ஜனவரி திங்கள் 11 ஆம் நாளன்று**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. கூடுதல் பயன்களை உள்ளடக்கிய இத்திட்டம், ஏழை மக்களுக்குத் தேவையான சிறப்பு சிகிச்சைகளைப் பெற பேருதவியாக இருக்கும்.** பேறுகாலத்தில் தாய் இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் போன்றவற்றை மேலும் குறைக்கும் நோக்குடன், விரிவான மகப்பேறு அவசர சிகிச்சைப் பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டதுடன், பச்சிளம் குழந்தைகளுக்கான 41 புதிய அவசர சிகிச்சைப் பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி, ஏழைத் தாய்மார்களின் மகப்பேறு உதவித் தொகையை நாட்டிலேயே மிக உயரிய அளவாக 12,000/– ரூபாய் என இந்த அரசு உயர்த்தியுள்ளது. தொற்று நோய் அல்லாத பிற நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, நோய்வாய்ப்பட்டவர்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய விரிவானதொரு இயக்கத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இவ்வனைத்து நடவடிக்கைகளும் அனைவரும் மருத்துவ வசதியைப் பெற வேண்டும் என்ற இந்த அரசின் நோக்கம் எட்டப்படுவதை உறுதி செய்யும்.

26. பொதுப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை இந்த அரசு எடுத்து

வருகிறது. **2011–2012** ஆம் ஆண்டில், **539.83** கோடி ரூபாய் செலவில், **3,000** புதிய பேருந்துகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், முதல்முறையாக, ‘என்ஜின்’, ‘அடிச்சட்டம்’ (chassis) ஆகியவை நல்ல நிலையில் உள்ள **1,432** பழைய பேருந்துகளின் மறுகட்டுமானத்திற்கு **97.58** கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்புதிய முயற்சிகள் போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறனை மேம்படுத்தி, பொது மக்களுக்கு சிறந்த சேவையை அளிக்க உதவும் என நம்புகிறேன். சென்னையில் ஒருங்கிணைந்த பன்முறை நகர்ப் போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தும் நோக்கத்தில், ‘**மோனோ ரயில்**’ திட்டத்தை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் விரைவாக நடைபெற்று வருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

**27. அரசின் சேவைகளை, மக்களை மையப்படுத்தி சிறப்பாகச் செயல்படுத்திட, தனியார் பங்களிப்புடன் மாவட்டப் புதுமை நிதியையும் இணைத்து அனைத்து மாவட்டங்களிலும் பயன்படுத்தப்படும்.** இந்த அரசால் கொண்டு வரப்பட்ட விரைவு வழி பட்டா மாறுதல் திட்டம் நல்ல பயனை அளித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூடுதலாக **50** விழுக்காடு பட்டா மாறுதல்கள்

நடந்துள்ளன. முதலமைச்சரின் **உழவர் பாதுகாப்புத் திட்டம்,** **2011** ஆம் ஆண்டு செப்டம்பர் **10** அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு கருவறை முதல் கல்லறை வரையிலான விரிவான சமூகப் பாதுகாப்பை வழங்குகிறது.

**28.** பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதை மாநிலம் தழுவிய மக்கள் இயக்கமாக மேற்கொள்ள ஐந்து கோடி ரூபாயையும், பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு பரிசோதனை அடிப்படையில் தார் சாலைகளை அமைப்பதற்கு **50** கோடி ரூபாயையும் இந்த அரசு கடந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருந்தது. இம்முயற்சியின் விளைவாக, பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு **50** கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் **146** கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன என்ற செய்தி மகிழ்ச்சியளிக்கிறது. **பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச் சூழல் சீர்கேட்டைத் தடுத்து, நீடித்த பயன்தரும் இதுபோன்ற சாலைகளை பெருமளவில் அமைக்க விரிவானதொரு திட்டம் செயல்படுத்தப்படும்.**

**29.** பல்வேறு வகையான சுற்றுலாத் தலங்களைக் காண விரும்பி வரும் பயணிகளைக் கவரத் தேவையான

பற்பல வளங்களை தமிழகம் தன்னகத்தே கொண்டுள்ளது. உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு உலகத் தரம் வாய்ந்த சேவைகளை அளிக்க இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது. இந்த வகையில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியில் ஒருங்கிணைந்த சுற்றுலா உள்கட்டமைப்புத் திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. அரசு–தனியார் பங்களிப்புடன் தமிழகத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான கொள்கை வரும் ஆண்டுகளில் தீவிரமாக செயல்படுத்தப்படும்.

**30.** நகர்மயமான மாநிலங்களில் முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு உள்ளதால், நகர்ப்புரக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான திட்டமிடுதலிலும் முதலீட்டிலும் கணிசமான முன்னேற்றம் தேவைப்படுகிறது. மக்கள் நகர்ப்புரங்களில் அதிகமாகக் குடிபெயர்வதாலும், தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகள் தேவைக்கு மிகக் குறைவாக இருப்பதாலும் அதிக நெருக்கடிகள் ஏற்படுகின்றன. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரப் புனரமைப்பு இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III போன்ற பல்வேறு திட்டங்களை ஒன்றிணைத்து செயல்படுத்துவதன் மூலமாக இத்தேவைகள்

நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. புறநகர்ப் பகுதிகள் இணைக்கப்பட்டு, சென்னை மாநகராட்சி தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே, ஏழு பிற மாநகராட்சிகள் மற்றும் எட்டு நகராட்சிகளின் எல்லைகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புர உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவைப்படும் கூடுதல் நிதி ஆதாரத்தைப் பெறுவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கம் (Chennai Mega City Development Mission), ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி இயக்கம் (Integrated Urban Development Mission) ஆகியவற்றை இந்த அரசு ஏற்கெனவே தொடங்கியுள்ளது. சாலைகள், தெருக்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களை மேம்படுத்துவதுடன் ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மை முறைகளைச் செயல்படுத்தவும் இந்த அரசு தொடர்ந்து கவனம் செலுத்தும். பெருந்திட்டம் (Master Plan) இல்லாத விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், சீரான மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் புதிதாக பெருந்திட்டம் தீட்டப்படும்.

**31.** கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகளையும், உள்கட்டமைப்பையும் மேம்படுத்த குக்கிராம அளவிலான அணுகுமுறையை இந்த அரசு பின்பற்றி வருகிறது.

இதற்கென, தமிழ்நாடு கிராமப்புறக் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் (Tamil Nadu Village Habitation Improvement Scheme - THAI) நமது மாநிலத்தில் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இத்திட்டம், ஐந்தாண்டுகளில் அனைத்து குக்கிராமங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் **2011–2012** ஆம் ஆண்டில் **2,020** கிராம ஊராட்சிகளிலுள்ள **25,335** குக்கிராமங்களுக்கு, சாலை, குடிநீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கும் சுகாதார வளாகங்களைப் புதுப்பிக்கும் ஒரு பெருந்திட்டம் துவங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப்புற வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் தவிர முதலமைச்சரின் பசுமை வீடு கட்டும் திட்டத்தின் கீழும் ஒவ்வொரு ஆண்டும் சூரிய மின்சக்தி வசதி கொண்ட **60,000** பசுமை வீடுகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. இத்திட்டங்களின் வாயிலாக அனைத்து கிராமப்புற ஏழைகளுக்கும் போதிய அடிப்படை வசதிகளும் பாதுகாப்பான வீட்டு வசதியும் வழங்க இயலும்.

**32.** பெண்கள், குழந்தைகள், முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் போன்ற சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் நலனுக்காக இந்த அரசு பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. முன் எப்போதும் இல்லாத முயற்சியாக ஏழைப் பெண்களின் திருமணத்திற்கான நிதியுதவியை உயர்த்தி, திருமாங்கல்யத்திற்குத் தங்கக்காசும் வழங்குவது; பெண்குழந்தை பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு புத்துயிரூட்டியது; நாட்டிலேயே உயர் அளவாக, சமூகப் பாதுகாப்பு உதவித்தொகையை இரட்டிப்பாக உயர்த்தியது; அனைத்து மாவட்டங்களிலும் ஆதரவற்றோர் மற்றும் முதியோருக்காக ஒருங்கிணைந்த இல்லங்களை ஏற்படுத்தி வருவது போன்ற செயல்கள் நலிவடைந்த பிரிவினர் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுள்ள பரிவுக்கும், கருணைக்கும் சான்றாக விளங்குகின்றன. முன் எப்போதும் இல்லாத வகையில், ஐந்து இலட்சம் புதிய பயனாளிகள் சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதோடு, முறைகேட்டைத் தடுக்கும் வண்ணம், அவரவர் வங்கிக் கணக்கின் மூலமாகவே நேரடியாகப் பணப் பட்டுவாடா செய்யவும் வகைசெய்யப்பட்டுள்ளது. ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட

மக்களுக்கு முழுமையான ஒரு சமூகப் பாதுகாப்பு உதவித் திட்டத்தை தமிழ்நாடு பெற்றிருப்பதை இத்தகைய முயற்சிகள் உறுதி செய்யும் என நான் நம்புகிறேன்.

**33.** சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் பழங்குடியினர் போன்றவர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமூக நீதியை நிலைநிறுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க முயற்சிகளால் 1994 ஆம் ஆண்டின் சட்டம் 45 இயற்றப்பட்டது; அதனை அரசமைப்புச் சட்டம் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கும் வகையில் நாடாளுமன்ற இரு அவைகளின் ஒப்புதலோடு கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட அரசமைப்பு திருத்தச் சட்டம்; பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்க 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசு ஆணை ஆகிய அனைத்தும் அனைவர் மனதிலும் நீங்காமல் நிலைத்திருக்கும். விடுதிகளில் தங்கிப் பயிலும் சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கான உணவு மானியம் இந்த அரசால் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், வாடகைக் கட்டடங்களில் தற்போது இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனக்கே உரிய வகையில் உறுதியான முடிவெடுத்துள்ளார்கள். ஏழைகள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆகியோர் நலனில் இவ்வரசு தொடர்ந்து தனிக் கவனம் செலுத்தும்.

**34.** சட்டமன்றத் தேர்தலில் பெருவாரியான வெற்றியை அளித்ததன் மூலமாக தமிழக மக்கள் தமக்களித்துள்ள மாபெரும் பொறுப்பை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. தொடர்ந்து காணப்பட்ட ஊழலுக்கும் திறமையின்மைக்கும் மாற்றாக, வெளிப்படையான, திறமையான நிருவாகத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்த மக்களின் எண்ணம் உள்ளாட்சித் தேர்தல்களில் மீண்டும் வெளிப்பட்டுள்ளது. இக்குறுகிய காலத்திலேயே, மாண்புமிகு முதலமைச்சர் தனது செயல்பாடுகளினால், அவர் மீதும், அவரது அரசின் மீதும், தமிழக மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மெய்ப்பித்துள்ளார். மோசமான நிதிநிலை, பொருளாதார மந்தநிலை, உதவிட மறுக்கும் மத்திய அரசு போன்ற பல்வேறு தடைகளையும் தாண்டி இவ்வரசு இம் மாநிலத்தையும், மக்களையும் உயர்த்தும் தனது குறிக்கோளை நோக்கி தொடர்ந்து பீடுநடைபோடும்.

இந்த வகையில், நமது மாநிலத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல நாம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு உங்கள் அனைவரது பேராதரவையும் தமிழக மக்களின் ஒத்துழைப்பையும் கோருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் எடுக்கப்படும் இம்முயற்சிகள் அனைத்தும் நிச்சயமாக பலனளிப்பதுடன், தமிழகம் வெளிப்படையான, திறமையான, வளம் மிக்கதொரு புதிய சகாப்தத்தை நிச்சயம் படைக்கும் என்பதை நான் முழுமையாக நம்புகிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**